


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 24.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்










We Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- **தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 25 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு பட்டயக் கணக்காளர் பயிற்சி** அளிக்கப்படும் என்று **தமிழக பள்ளிக்கல்வி துறை அமைச்சர்** தகவல்
    - மேட்டூரை அடுத்த கொளத்தூரில் தமிழக அரசின் பள்ளிக் கல்வி துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவியருக்கான பட்டயக் கணக்காளர் படிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - மெட்ராஸ் மாகாணத்தில் 1849-ம் ஆண்டு முதல் பெண்கள் உயர்நிலை பள்ளி தொடங்கப்பட்டது.
        - தமிழக இடைநிலை கல்வி வாரியம் முதன்முறையாக 1910-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
        - மதராஸ் மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சர் திரு.சுப்புராயாலு ஆவர்.

## தேசிய நிகழ்வுகள்

- **மகாராஷ்டிரா மாநிலத்தின் 18-வது முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றார் தேவேந்திர.ஃ.பட்னாவிஸ்**
    - மகாராஷ்டிராவில் நடந்த சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் கடந்த நவம்பர் 12-ம்தேதி குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

- மகாராஷ்டிராவில் 288 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. அதில் பெரும்பான்மை பலம் பெற 145 இடங்கள் தேவை
- **செய்தி துளிகள்**
  - மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆளுநர் - பகத்சிங் கோஷியாரி
  - இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356 (1) பிரிவு மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சி பற்றி குறிப்பிடுகிறது.

- **"அருந்ததி ஸ்வர்ண யோஜனா" என்ற திட்டத்தை அசாம் அரசு அறிவித்துள்ளது.**
  - இத்திட்டத்தின்படி குறைந்தது 10-ம் வகுப்பு முடித்த திருமணத்தை பதிவு செய்த பெண்களுக்கு "10 கிராம்" தங்கம் வழங்கப்படும் என்று அசாம் அரசு தெரிவித்துள்ளது.
  - குடும்பங்கள் தங்களது திருமணத்தை சிறப்புத் திருமண (அசாம்) விதிகள், 1954-ன் கீழ் பதிவு செய்ய வேண்டும்.
  - **செய்தி துளிகள்**
    - "தமிழக அரசின் தாலிக்கு தங்கம்" திட்டம் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் 2011-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

- **மாநில ஆளுநர்கள், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்கள் ஆகியோருக்கான 50-வது மாநாடு, தில்லியில் நடைபெற்றது.**

- விழாவினை தொடங்கி வைத்த குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந், கூட்டாட்சி தத்துவத்தை மேம்படுத்த ஆளுநர்களின் பங்கு அவசியம் என்று குறிப்பிட்டார்.
- குடியரகு தலைவர் மாளிகையில் 2 நாட்கள் மாநாடு நடைபெற உள்ளது.
- **செய்தி துளிகள்**
  - மாநிலத்தின் ஆளுநர்கள் பற்றி குறிப்பிடும் ஷரத்து 153
  - டெல்லி குடியரசு தலைவர் மாளிகை "ராஷ்டிரபதி பவன்" என்று அழைக்கப்படுகிறது.

## விளையாட்டு செய்திகள்

- **2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டி குதிரையேற்ற பந்தயப் பிரிவுக்கு தகுதி பெற்றுள்ளார் இந்தியாவின் பவாத் மிஸ்ரா**
  - 20 ஆண்டுகள் கழித்து ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற இந்திய வீரர் என்ற சிறப்பை பெற்றார் பவாத்
  - **செய்தி துளிகள்**
    - 32-வது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற உள்ளது.
    - 2000-ம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் குதிரையேற்ற போட்டியில் இந்தியாவின் இம்தியாஸ அனிஸ் தகுதி பெற்றிருந்தார்.

## திருக்குறள்

**குறள் எண்: 27**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: பாயிரம்

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு**

**விளக்கம்:** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

We Shine Academy™